[2011 ஆகஸ்ட் 16

போட்டி போன்ற அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மழைக் காலங்களில் அங்கே தண்ணீர் தேங்குவதாகச் சொல்கிறார்கள். அதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து வடிகால் அமைத்தால் நிச்சயமாகப் பயன் அளிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

சர்வீஸ் ரோடு

***862—திரு. எஸ். செந்தில்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி–தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் துவாக்குடி–பால் பண்ணை இடையே சர்வீஸ் ரோடு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) ஆம்.

(ஆ) சேவைச் சாலை அமைப்பதற்குரிய நில எடுப்புப் பணிகளை ரூ.84.50 கோடி மதிப்பில் மேற்கொள்ள அரசின் பரிசீலனையில் உள்ளது. நில எடுப்புப் பணிகள் முடிந்தவுடன் சேவைச் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.*

திரு. எஸ். செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இம்மாமன்றத்தில் அமரவைத்து அழகுபார்க்கும் ஏழைகளின் தோழர், எங்கள் தலைவர் கேப்டன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பிவைத்து அழகுபார்க்கும் எனது தொகுதி மக்களுக்கும், அனைத்து கூட்டணிக் கட்சியினருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த மன்றத்தின் வாயிலாக எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் சட்டங்களும், திட்டங்களும் எப்படி அவர்களுடைய சுயநலத்திற்காக மாற்றப்பட்டன என்பதற்கு இந்தச் சாலை ஓர் உதாரணம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. இது குற்றச்சாட்டு இல்லை. சட்டங்களும், திட்டங்களும் எப்படிப் போட்டார்கள் என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) உண்மையை ஓர் உறுப்பினர் பிரதிபலிப்பது எந்தவிதத்திலே குற்றச்சாட்டு ஆகும்? (குறுக்கீடுகள்) எதார்த்த நிலையைப் பிரதிபலிக்கின்ற எந்தச் செயலும் குற்றச்சாட்டு ஆகாது. (குறுக்கீடுகள்) இதில் குற்றச்சாட்டு என்ன இருக்கிறது? சட்ட திட்டங்கள் போட்டார்கள்; அதைச் செயல்படுத்தவில்லை என்று சொல்கிறார். அது என்ன குற்றச்சாட்டு? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2011–ல் அவர்கள் என்ன செய்தார்களோ. . . (குறுக்கீடுகள்) 2006–2011–ல் அவர்கள் என்ன செய்தார்களோ. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமரக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

உட்காருங்கள், உட்காருங்கள். Please sit down. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2011–ல் அவர்கள் கட்சி உறுப்பினர்கள் என்ன பேசினார்களோ அந்த அளவிற்கு திரு. மனோகரன் பேசவில்லை. அவர்கள் பேசியதை, அவைக் குறிப்பை எடுத்துப் பார்த்தால் தெரியும். கடந்த ஆட்சியில் அவர்கள் முறையாகப் பேசினார்களா என்பது அவர்களுக்கே தெரியும். எங்களைப் பேசக்கூட அனுமதிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

திரு. ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் கேள்வி கேட்கும்போது, எதிர்த்தரப்பிலே கருத்துகளைப் பரிமாறிக்கொள்வது இயற்கை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், மிகக் கேவலமாக, கீழ்த்தரமாக, சிரித்து, கிண்டல் செய்து கொண்டிருக்கிறார். தயவுசெய்து அவரைக் கண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், கேள்வி கேட்பதுகூட ஒருவகையில் நியாயம் என்று சொன்னாலும், இந்த Body language என்று சொல்வார்களே, அந்த Body language மற்றவர்கள் அருவருக்கத்தக்க வகையிலே அவருடைய நடவடிக்கைகள் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் (குறுக்கீடுகள்) வரலாற்றுச் சிறப்புமிக்க, எல்லோரும் மதிக்கத்தகுந்த இந்த அவையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, body language–ல் இதுபோன்று செய்வது என்பது, எல்லா வகையிலும் உறுப்பினருடைய உரிமையைப்

2011 ஆகஸ்ட் 16]

பாதிக்கின்ற ஒரு செயலாகும். அதை நான் நிச்சயமாக அனுமதிக்க மாட்டேன். அதுபோல தொடர்ந்து கொண்டிருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

திரு. துரைமுருகன்: *நான் "சிவனே' என்று உட்கார்ந்திருக்கிறேன். அவர் என்னை ஏன் இதிலே இழுக்கிறார்? (குறுக்கீடுகள்) நான் சும்மாதானே உட்கார்ந்திருக்கிறேன். யாரையாவது-*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்) ஒரே நிமிடம். (குறுக்கீடுகள்) ஒரே நிமிடம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *பேரவைத் தலைவர் அவர்களே, "சிவனே' என்று உட்கார்ந்து, இங்கே 'நக்கல்' செய்வதைத்தான், ஒரு 'கலை' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் நினைத்தால், அதைவிட அழகாக நக்கல் செய்வதற்கு எங்களுக்கும் தெரியும். (குறுக்கீடுகள்) அதைப்போல செய்வதற்கு எங்களுக்கும் தெரியும். நாங்களும் திராவிடப் பாரம்பரியத்திலிருந்து வந்தவர்கள்தான். அதைப்போல செய்வதற்கு எங்களுக்கும் தெரியும். உட்கார்ந்து கொண்டு, காலை ஆட்டிக் கொண்டு, கையை ஆட்டிக் கொண்டு, கேவலமாகச் சிரித்துக் கொண்டிருப்பது என்பது ஒரு முறையான அணுகுமுறையா? ஒரு அரசியல் தலைவருக்கு உள்ள அழகா? ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு உள்ள அழகா? கீழ்த்தரமாக இல்லையா? ஏன் இப்படி அவர் நடந்துகொள்கிறார்? (குறுக்கீடுகள்) அவர் ஒரு Senior Member. (குறுக்கீடு) ஒரு Senior Member இப்படி நடந்து கொள்ளலாமா? (குறுக்கீடுகள்) ஒரு மூத்த உறுப்பினர் இதுபோன்று நடந்து கொண்டால், புதிதாக வரும் உறுப்பினர்கள் எப்படி நடந்து கொள்வார்கள்? தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய body language–ஐ மாற்றிக் கொள்ள வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. ரா. சரத்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் தலைவர் எப்படி, எவ்வழியோ, அப்படித்தான் அவர்களும் நடந்து கொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) காரணம், அண்மையிலே ஒரு செய்தித்தாளிலே, அவர்களது தலைவர், நமது எதிர்க்கட்சித் தலைவரான அன்புச் சகோதரர், புரட்சிக் கலைஞர் அவர்களைப்பற்றி ஒரு தகாத வார்த்தையைச் சொல்லி, அதைப் பத்திரிகையிலே செய்தியாகப் பார்த்தேன். ஆகவே, அவர்கள் தலைவர் எவ்வழியோ, அவ்வழிதான் அவர்களும் நடந்துகொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அதற்காகத்தான் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆர். மனோகரன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அவை முன்னவர் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். அவை முன்னவர் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள், தன்னுடைய கேள்வியைத் தொடங்குகின்ற நேரத்தில், கடந்த ஆட்சியினுடைய சட்ட திட்டங்கள்பற்றி இங்கே சொன்னவுடன், அவர்கள்தான் எழுந்து முதலிலே விவாதத்தை ஆரம்பித்தார்கள். அதாவது, என்ன சட்ட திட்டங்கள், என்ன

2011 ஆகஸ்ட் 16]

குறைபாடுகள் என்று கேட்டுவிட்டு, அதற்குப் பதில் சொல்லலாம். 'சட்ட திட்டங்கள்' என்று சொல்ல ஆரம்பித்தவுடனேயே, பிரச்சினைகளை ஆரம்பித்தவர்கள் அவர்கள்தான். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, body language–*ஆக அவருக்கே உரிய பாணியில் சொன்னதன் அடிப்படையில், இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. இனிமேல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைமுருகன், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சபையின் விதிகளுக்கு உட்பட்டு நடந்துகொள்ள வேண்டும். சபைக்கென்று சில மரபுகள் இருக்கின்றன. அந்த மரபுக்கு உட்பட்டு, சபை நடவடிக்கைக்குக் குந்தகம் இல்லாமல் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

திரு. துரைமுருகன்: *பேரவைத் தலைவர் அவர்களே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதோடு இந்தப் பிரச்சினையை விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், உறுப்பினர்கள் அவைக்கு எந்தவிதத்திலே ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அதோடு பிரச்சினை முடிந்தது. தயவுசெய்து நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். (குறுக்கீடு) நீங்கள்* body language–*ஐக் காண்பித்தீர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் செய்யவில்லை என்று சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.*

திரு. ஆர். மனோகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அப்படி நீங்கள் நடந்து கொண்டதாகக்*

[2011 ஆகஸ்ட் 16

குற்றச்சாட்டு சொல்கிறார்களே, அதை எப்படி வாபஸ் வாங்கமுடியும்? (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் என்ன செய்தீர்களோ, அதைத்தான் அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

முற்பகல் 10—35

திரு. ஆர். மனோகரன்: *கடந்த ஆட்சியில், திருச்சி பழைய பால் பண்ணையிலிருந்து தஞ்சாவூருக்குச் செல்கின்ற சாலையை நான்குவழிச் சாலையாக அமைப்பதற்குத் திட்டமிட்டபொழுது, அந்த நான்குவழிச் சாலையோடு இணைப்புச் சாலையையும் சேர்த்துத்தான் திட்டமிட்டார்கள். சில சுயநல விரும்பிகளின் விருப்பத்தின்பேரிலே, அந்தத் திட்டத்தை வளைத்து, சட்டத்தை வளைத்து, அந்த நான்குவழிச் சாலைக்குப் பக்கத்திலே சர்வீஸ் சாலை வராமல் அன்றைய தி.மு.க.-வினர் தடுத்ததால், இன்றைக்கு ஆயிரக்கணக்கான விபத்துக்கள் ஏற்படுகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தச் சாலையிலேதான் BHEL நிறுவனம் இருக்கிறது; நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் இருக்கின்றன; பல கல்லூரிகள், பள்ளிகள் இருக்கின்றன. தினந்தோறும் விபத்துகள் நடப்பதற்குக் காரணமாக இருந்தது கடந்த ஆட்சி.*

அந்தவகையிலே, இந்த இடத்திலே சர்வீஸ் சாலையை அமைக்க வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியையும் பெற்று நாங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 28—2—2010 அன்று அப்பொழுது திருச்சி மாவட்டப் பொறுப்பாளராக இருந்த தங்கள் தலைமையிலே, ஒரு மிகப் பெரிய கண்டன ஆர்ப்பாட்டத்தைத் திருச்சியிலே நடத்தினோம். அப்படி நடத்தியும்கூட, அப்பொழுது இருந்த ஆட்சியாளர்கள் பொது மக்களைப்பற்றியும் கவலைப்படாமல், விபத்துகளைப் பற்றியும் கவலைப்படாமல், சில வியாபாரிகளுக்கு, சில சுயநல விரும்பிகளுக்குச் சாதகமாக அந்த சர்வீஸ் சாலையை அமைக்கவிடாமல் தடுத்துவிட்டார்கள். இதைத்தான் நான் சட்டத்தையும், திட்டத்தையும் திருத்தினார்கள் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் பல விபத்துகள் அந்தச் சாலையிலே நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே "சர்வீஸ் சாலை"

2011 ஆகஸ்ட் 16]

போடப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்கள், அந்தப் பகுதியிலே வேலை செய்கின்ற அரசு ஊழியர்கள், தனியார் ஊழியர்களுடைய வயிற்றிலே பாலை வார்த்திருக்கிறது. இதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் திருச்சி மாவட்ட மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பா. வளர்மதி அவர்கள்.*

திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் நியாயத்தைப்பற்றி, நியாயமான நடவடிக்கைகளைப்பற்றி இங்கே பேசுகிறார். நியாய, தர்மத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் பேசுவதுதான் எங்களுக்கெல்லாம் மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. இதே அவையிலே . . . (குறுக்கீடு) நான் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் குறுக்கிடாதீர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்; பேசி முடிக்கட்டும்.*

திருமதி பா. வளர்மதி: *நான் முதலிலே நேரம் கேட்டுவிட்டேன் பேரவைத் தலைவர் அவர்களிடம். எனக்கு நீங்கள் பேசுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இதே அவையிலே, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்தில், சபை நடவடிக்கைகளில் பங்கேற்க வந்தபோது, எங்கள் அம்மாவின் சேலையைப் பிடித்து இழுத்து, மானபங்கப்படுத்துவதற்கு முயற்சி செய்த துச்சாதனன் கூட்டத்திற்குத் தலைமையேற்று நடத்தியவர் துரைமுருகன் என்பதை மறந்துவிட்டு, இந்தச் சபை நாகரிகத்தைப்பற்றி பேரவைத் தலைவருக்குச் சொல்லித் தருவதற்கு அவருக்கு யோக்கியதை இல்லையென்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) உறுப்பினர் அவர்கள், ஒரு நிமிடம் நான் சொல்வதைக் கேளுங்கள்.* Body language *மூலம் அவையினுடைய கண்ணியத்தைக் குலைக்கின்ற அளவிற்கு, எந்த அளவுக்கு நீங்கள் செயல்பட்டீர்கள் என்பதை அவைக்கு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் சொன்ன பிறகு, ஓர் உறுப்பினர், நீங்கள் அதைத்தான் வழக்கமாகச் செய்வீர்கள் என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? இதற்கு நீங்கள்தான் காரணம்.* You are the cause of action. (Interruptions) You are the cause of action. (Interruptions) You are the cause of action. *நீங்கள் அந்தமாதிரி* (body language) *செய்யவில்லையென்றால், அமைச்சர் அவர்கள் அதுபோல கருத்து சொல்லியிருக்க வேண்டிய அவசியம் எழுந்திருக்காது. உறுப்பினர் அவர்களும் தொடர்ந்து சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமும் எழுந்திருக்காது. (குறுக்கீடுகள்)* You are the cause of action, because you only created it. *(குறுக்கீடுகள்)*

(தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

சொந்தக் கட்டடம்

***1552—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூலூர் வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டத்தில் புதியதாக வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக நிலம் தேர்வு